Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

Calendar
Miscellaneous Case No.CC.No.149/2018
Preliminary Register
Deposition of ....PW4 Witness for........... Petitioner

| | |
|---|---|
| Name | : கோவிந்தன் |
| Father's /Husband Name | : மாரியப்பன் |
| Village | : அத்திப்பாடி |
| Taluk | : ஊத்தங்கரை |
| Calling | : PW4 |
| Occupation | : கூலி |
| Religion | : |
| Age | : 43 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 04.07.2023

Accused present.

**முதல் விசாரணை :**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவரை நான் சம்பவம் நடந்த நாளுக்கு அடுத்த நாள் காவல் நிலையத்தில் பார்த்தேன். கடந்த 25.03.2018 ம் தேதி எனது மகன் சரசுராமன் அத்திப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் விளையாடுவதற்காக மாலை 5.30 மணிக்கு வீட்டில் இருந்து நடந்து சென்றுக்கொண்டிருந்த போது யு 10 என்ற அரசுப்பேருந்து பள்ளத்தூரில் இருந்து ஊத்தங்கரையை நோக்கி வந்த பேருந்து எனது மகன் மீது ஏறி மூளை சிதறி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பிரேத பரிசோதனைக்காக வேண்டி ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தோம். பிரேத பரிசோதனை செய்து என்னிடம் பிரேதத்தை கொடுத்தார்கள். வழக்கு சம்மந்தமாக அ.சா.1 வள்ளி எனது

மனைவி சிங்காரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அருகே மாந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காததால் யாருடைய அஜாக்கரதையாலும், கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். எனது மகன் மாந்தோப்பில் இருந்து மாங்காய் பறித்துக்கொண்டு தோட்டக்காரர் மிரட்டிய காரணத்தினால் அங்கிருந்து ஓடி வந்து வாகனத்தின் மீது விழுந்து விட்டார் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

S SAHAANA

Judicial Magistrate,
Digitally signed by S SAHAANA
Location: Uthangarai.
Date: 2023.07.04 18:54:03 +0530

Judicial Magistrate,
Uthangarai.